வானமாமலை மாலை

பதிப்பு

செ. மார்கண்டன்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.
2007

வானமாமலை மாலை

"சுவடியியலும் பதிப்பியலும்" பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்படும் பதிப்பேடு

பதிப்பாளர்
செ. மார்கண்டன்

நெறியாளர்
முனைவர். ய. மணிகண்டன்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்லைக்கழகம்
சென்னை - 600 005.
ஆகஸ்ட் - 2007

"சுவடியலும் பதிப்பியலும்"

பட்டயப் பேற்றிற்காகச்

சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு

அளிக்கப்பெறும் ஆய்வேடு

எண்: 53010624

நெறியாளர் சான்றிதழ்

முனைவர் ய. மணிகண்டன்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

சென்னைப் பல்கலைக்கழகத்தமிழ் இலக்கியத் துறையில் நடைபெற்று வரும் சுவடியியலும் பதிப்பியலும் பட்டயப் பேற்றிற்காக 'வானமாமலை மாலை' என்னும் தலைப்பிலான சுவடியை செ. மார்கண்டன் அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்பு செய்தார் என்றும் இந்த ஆய்வேடு அவரின் சொந்த முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்

(ய. மணிகண்டன்)

நாள்: - -2007
இடம்: சென்னை-5.

பதிப்பாளர் உறுதிமொழி

செ. மார்கண்டன்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத் துறையில் நடைபெற்று வரும் சுவடியியலும் பதிப்பியலும் பட்டயப் பேற்றிற்காக **'வானமாமலை மாலை'** . என்னும் தலைப்பிலான சுவடி பேரா. ய. மணிகண்டன் அவர்களின் மேற்பார்வையில் என் சொந்த முயற்சியில் உருவானது என்றும் இதற்குமுன் வேறுஎந்த பட்டயப் பேற்றிற்காகவும் அளிக்கப் பெறவில்லை என்று சான்றளிக்கிறேன்.

பதிப்பாளர்

(செ. மார்கண்டன்)

நாள்: - -2007
இடம்: சென்னை-5.

உள்ளடக்கம்

1.	பதிப்புரை	1–4
2.	சிற்றிலக்கியப் பதிப்பு ஒரு பார்வை	4–16
3.	சிற்றிலக்கியப் போக்குகள்	16–22
4.	மாலை நூல்பற்றிய வகைப்பாடுகள்	22–42
5.	காப்புச் செய்யுள்	43–44
6.	பிரபந்தப் பாடல்	45–64
7.	பாடல் அகரவரிசை	65–67
8.	பின்னிணைப்பு	68–69
9.	துணைநூற்பட்டியல்	70–71

பதிப்புரை

சிற்றிலக்கியங்கள் ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக, குறிப்பிட்ட பொருள் அமைதியோடு எழுந்தனவே எனினும் அவற்றுள், சிலவற்றுள் வேறு சிற்றிலக்கிய பொருள் கூறும் விரவி உள்ளன. தசாங்கம் என்பது தனியொருவகை சிற்றிலக்கியம். ஆயினும் உலா, தூது,சின்னப்பூ ஆகிய வேறு சிற்றிலக்கியங்களிலும் தசாங்கம் ஒரு இன்றியமையாத உறுப்பாக விளங்குகின்றது.

தமிழிலக்கியங்களில் பெரும்பாலனவும் சிற்றிலக்கியங்களே. அவை எல்லாக் காலத்திலும் காணப்படுகின்றன. பழம்பாடல்களாகிய சங்கப் பாடல்களைத் தனித்தனியாக நோக்கினோமானால் அவை ஒவ்வொன்றும் அகப்பொருள் பற்றியோ புறப்பொருள் பற்றியோ அமைந்த ஒருவகை சிற்றிலக்கிய மரபு கொண்டவை என்பது புலனாகும். பெருங்காவியங்கள், சிறு காவியங்கள், புராணங்கள் ஆகியவை தொடர்நிலைச் செய்யுள் எனப்படும் பேரிலக்கியங்களாகக் கருதப்படுகின்றன. இவை ஒழிந்தன எல்லாம் சிற்றிலக்கியங்களே.

தனிமனிதன் ஒருவன் படைத்தளிக்கும் கலையானது முழுக்க அவனது கற்பனையிலிருந்து உதித்தது அன்று. எந்த ஒரு கலைக்கும் புறவயமான தூண்டுதல் கலைஞன் சார்ந்திருக்கும் சமுதாயத்திலிருந்து கிடைத்ததாக இருக்கும். ஒரு சமுதாயத்திலிருந்து கிடைக்கும் புறவயத் தூண்டுதல்கள் பலவாக இருக்கலாம். அப்பலவும் கலைஞனைப் பாதிக்க வாய்ப்புண்டு.

முரண்பட்ட புறவயத் தூண்டுதல்களால் ஆட்கொள்ளப்பட்ட ஒரு கலைஞனின் படைப்புகளில் அம்முரண்பாடுகள் தெளிவாகப் பதிவு செய்யப்பெற்றிருக்கும். முரண்பாடுகள் கலைஞனின் முரண்பாடுகள் ஆகா; அவன் சார்ந்த சமூகப் பண்பாட்டு இயக்கங்களின் முரண்பாடுகள் ஆகும். இந்நிலை இலக்கியப் படைப்பாளிகளுக்கும் பொருந்தும். ஒரு கவிஞன் சமூக இயக்கப் புறவயத் தூண்டுதல்கள் ஒன்றாலோ அல்லது பலவற்றாலோ பாதிக்கப்பட்டுத் தன் சிந்தனைக் கற்பனைகளோடு கலந்து ஓர் , இலக்கியத்தைத் தரலாம். ஆனால் அவனைப் பாதிக்கும் புறவயத் தூண்டல்கள் அவனது சார்புத் தன்மையோடு நெருங்கிய தொடர்பு கொண்டதாய் அமைந்திருக்கும்.

ஒவ்வொரு கலை வடிவமும் சமூகத்தின் ஏதாவதொரு பிரிவோடு உறவு கொண்டுள்ளது. இது அதன் உள்ளடக்கத்தாலே நிர்ணயிக்கப்படும். இந்த உள்ளடக்கம் கலைஞன் பிரதிநிதித்துவப்படுத்தும் வர்க்கத்தின் கருத்துக்களாகவோ அல்லது அவன் மீது செல்வாக்குக் கொண்டுள்ள பல்வேறு சமூகப் பிரிவுகளின் கருத்துக்களாகவோ அமையும். எனவே ஒரு படைப்பாளியையோ அவன் படைப்புகளையோ விமரிசிக்கும்போது அவன் படைப்பின் உள்ளடக்கம், அதன் சாராம்சம், சமூகப் பிரிவுகளுடன் கலைஞனின் தொடர்பு, சமூக வாழ்வின் மீது படைப்பு வகிக்கும் செல்வாக்கு, அதனால் ஏற்படும் விளைவுகள் ஆகியவற்றை அப்படைப்புகள் எழுந்த காலத்தை ஒட்டி ஆராய வேண்டும்.

ஏனெனில், கலைஞனின் படைப்புகள் அவன் வாழ்ந்த காலத்தின் பிரதிபலிப்பு. ஆனால் வெறும் பிரதிபலிப்பு மட்டுந்தானா? கலைஞனுக்கு ஓர் அனுபவம் இருக்கிறது. அது அவன் காலத்தில் வாழ்ந்த எல்லாக் கலைஞர்களுக்கும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. புறவுலகின் சூழல்கள் எவ்வாறு கலைஞனைப் பாதித்து, அவனது அனுபவத்தையும் தேவையையும் சார்பையும் உருக்கொண்டு வெளிவருகிறது என்பதுதான் படைப்பு.

அதாவது புறவுலகின் யதார்த்தம் அதன் பிரதிபலிப்போடு கலைஞனின் அகவுலகும் சேர்ந்துதான் படைப்பாக வெளிவருகிறது.

ஈராயிரம் ஆண்டு இலக்கியப் பாரம்பரியம் உடைய தமிழ் இலக்கியப் போக்குகளை அவ்வக் காலத்துத் தோன்றிய இயக்கங்கள் பெரிதும் பாதித்துள்ளன. எந்தவோர் இலக்கியக் கலையும் திடீரென முளைத்து விடுவது இல்லை. மறைந்து விடுவதும் இல்லை. மாறி விடுவதும் இல்லை. எல்லாவற்றிற்கும் ஆழமான சமூகப் போக்குகள் அடித்தளமிட்டுள்ளன. இவவடித்தளத்தில் நின்று இருபதாம் நூற்றாண்டுச் சிற்றிலக்கியங்களை மதிப்பீடு செய்வதும், அதற்கும் முன்பாக ஈராயிரமாண்டு இலக்கிய வரலாற்று இயக்கங்கள் எவ்விதம் பாதித்தது என்பதையும் படைப்புகளின் வாயிலாக அறிய முடிகிறது. இதன் பின்புலத்திலே சிற்றிலக்கிய மரபையும் காணமுடிகிறது.

2. சிற்றிலக்கியப் பதிப்பு ஒரு பார்வை;

தமிழகத்தின் வளர்ச்சியையும் வரலாற்றையும் அறிய உதவுவன அவ்வக்கால இலக்கியங்களே. அவ்வகையான இலக்கியப் பதிவுகளின் வாயிலாகவே முடிந்த அடையாளங்களை நிர்மாணிக்க முடிகிறது. இலக்கியப்

பதிவுகளைக் கொண்டே நாம் பழமை வாய்ந்த பூர்வீக குடிகள் என்கிறோம். இதனை அடியொற்றியே செம்மொழி என்ற கிரீடமும் தமிழ் மொழியின் தலையில் சூட்டப்பட்டுள்ளது.

சங்க கால பதிப்புகள் சிறந்த சான்றோர்களையும் வள்ளல்களையும் கொண்டிருந்தமையை அக்காலத்தியத் தொகைப் பாடல்கள் விளக்குகின்றன. சங்கம் மருவிய காலம் சமண, பௌத்த சமயத்தின் ஆதிக்கம் மேலோங்கி இருந்ததை அக்காலக் கட்டத்தில் தோன்றிய காப்பியங்களும் பிற நீதி நூல்களும் விளக்கின.

களப்பிரர் ஆதிக்கம் பெற்றிருந்த காலம் தமிழிலக்கிய வரலாற்றில் இருண்ட காலம் எனக் குறிப்பிடப்படுகிறன்றது. சமண, பௌத்த சமயங்களின் ஆதிக்கத்தை வீழ்த்தி மீண்டும் இந்து மத வளர்ச்சிக்கு உதவியது பல்லவர் ஆட்சிக் காலம். இப்பல்லவர் காலம், பக்தி இலக்கிய காலம் என்றும் கூறப்படுகின்றது. இவ்வகையான காலக் கட்டத்தில் அதிகப்படியான இலக்கியப் பதிப்புகள் செய்யப்பட்டன. பல்லவர்களை அடுத்து ஆட்சிக்கு வந்த சோழர் காலத்தில் தமிழ் வளர்ச்சி உச்ச கட்டத்தை அடைந்தது. எனவேதான் சோழராட்சிக் காலத்தைத் தமிழிலக்கிய வரலாற்றின் பொற்காலம் என்று கூறுகின்றனர்.

நாயக்கர் ஆட்சிக் காலத்தில் சோழராட்சிக் காலம் போன்று காப்பியங்களும் புராணங்களும் தோன்றவில்லை. ஆயினும் பள்ளு. உலா. தூது, மாலை, கலம்பகம் முதலிய சிறுபிரபந்தங்களும் கோயில்களைப் பற்றிய சிறுசிறு தலபுராணங்களும் தோன்றின. பிரபந்தம் என்பது வடமொழிச் சொல் சிறு பிரபந்தங்கள் எனப்படுகின்ற வடமொழிச் சொல் தமிழில் சிற்றிலக்கியங்கள் என்று வழங்கப்படுகின்றது.

செய்யுள், யாப்பு எனும் சொற்களைப் போன்றே பிரபந்தம் என்ற சொல்லும் நன்கு கட்டப்பட்டது என்ற பொருளுடையதாகும். பிரபந்தங்கள் 96 என்பது வழக்கு. இதனை ஒட்டி வீமாமுனிவர் தமது சதுரகராதியில் பிரபந்தம் 96 வகை என்று குறிப்பிடுவார்.

இப்பிரபந்தங்களின் இலக்கணம் பற்றிப் பிற்காலத்தில் தோன்றிய பன்னிருபாட்டியல், வச்சணந்திமாலை என வழங்கும் வெண்பாப்பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், நவநீதப்பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல் போன்ற பாட்டியல் நூல்கள் விரித்துரைக்கின்றன. ஆனால், இவற்றுள் கூறப்படாத சிற்றிலக்கியங்கள் சிலவற்றை இலக்கண நூல்கள் குறிப்பிடுகின்றன.

96 வகைப் பிரபந்தம் எனும் பொழுது தமிழிலுள்ள காப்பியம் புராணம் சிறுநூல்கள் அனைத்தையும் உட்கொண்டே கூறப்பட்டு வந்தது என்பதைப் பாட்டியல் நூல்களைக் கொண்டு தெளியலாம். சிற்றிலக்கிய நூல்கள் நெடும்பாட்டு போல்வன. ஒரு சிறு துறைகளைப் பற்றிய செய்திகளையே உள்ளடக்கியன. சுருங்கிய அளவினதாகவும் எளிதில் படித்து முடிக்கக் கூடியனவாகவும் அமைவன. இச்சிற்றிலக்கியங்கள் பொதுவாக ஆண்டவன், அரசன், வள்ளல், குரு ஆகியோரின் சிறப்புக்களை எடுத்துரைப்பதையே தமது நோக்கமாகக் கொண்டு விளங்கின.

சிற்றிலக்கியம் என்ற சொல் வழக்குப் பிற்காலத்தாயினும் சங்க காலம் முதலே இவ்வகைமைகள் தமிழில் இடம் பெற்றிருந்தது. காலந்தோறும் வளர்ச்சி பெற்று வந்திருக்கின்றன. பல சிற்றிலக்கிய வகைமைகளுக்கான வித்துக்களை நாம் சங்க இலக்கியத்துள் காணலாம். (தமிழிலக்கிய வரலாறு - அ. ஜெயம், ப.208.)

அன்று முதல் இன்று வரை பல சிற்றிலக்கிய வகைகள் சிறந்து வளர்ந்துள்ள போதும் சிற்றிலக்கிய வகை மோலோங்கிய காலம் என்பது கி.பி. 12 ஆம்

நூற்றாண்டில் தொடங்கியது. பல்லவர் காலத்தைப் பக்தி இலக்கிய காலம் என்றும் இடைக்காலச் சோழர் காலத்தைக் காப்பிய காலம் என்றும் அக்காலக் கட்டத்தில் தோன்றி இலக்கியங்களின் மேலோங்கிய தன்மையால் சிறப்பித்துக் கூறுவது போல கி.பி. 1350 முதல் ஆட்சி புரிந்த நாயக்கர் காலத்தைச் சிற்றிலக்கிய காலம் என்று கூறலாம்.

சிற்றிலக்கியங்கள் அகம் பற்றியன, புறம் பற்றியன, பக்தி பற்றியன எனப் பல பிரிவுகளாகப் பகுத்து நோக்கத் தக்கன. இவற்றுள் தலைமை வாய்ந்தவையாகக் காணப்படுவன அந்தாதி, பிள்ளைத்தமிழ், பரணி, கலம்பகம், கோவை, உலா, மாலை, தூது, பள்ளு, குறவஞ்சி என்பனவாம். இச்சிற்றிலக்கியங்கள் எல்லாம் தொல்காப்பியம் கூறும் விருந்து எனும் வனப்பினுள் அடங்கும்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் இடைக்காலத்தில் எழுந்த காப்பிய இதிகாசங்களைப் பேரிலக்கியங்கள் என்றும் பிற்காலத்தில் எழுந்த இலக்கியங்களைச் சிற்றிலக்கியங்கள் என்றும் பிரிக்கின்றனர். சங்க இலக்கியங்களிலும் தொல்காப்பியத்திலும் சிற்றிலக்கியம் என்ற சொல் இல்லை. சிற்றிலக்கியம் பேரிலக்கியம்

என்னும் பிரிவு தமிழிலக்கிய நெடு வரலாற்றில் அண்மைக் காலத்ததே யாகும். (திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கைகளும் - ந. பிச்சமுத்து, ப.153.)

அடிகளால் மிகுந்து பொருள்களால் சிறந்து மக்கள் வாழ்வையொட்டி மக்கள் வாழ்வைச் செம்மைப் படுத்தி இன்பம் நல்கத் தோன்றினவெல்லாம் பேரிலக்கியங்களாயின. அவைகள் தாம் கூறும் பொருள் பாகுபாட்டால் பெயர் பெற்றிருக்கலாம். அடிகளால் குறைந்து கற்பனை மிக்குக் கடவுளர்களையும் செல்வந்தர்களையும் தலைவர்களாகக் கொண்டு இயற்றப்பட்டவை சிற்றிலக்கியங்கள் எனப்பட்டன. இவை தாம் கொண்டுள்ள பாவகையால் பெயர் பெற்றிருக்கும். பிரபந்தம் என்ற வட சொல்லால் அழைக்கப்பட்டன வெல்லாம் சிற்றிலக்கியங்கள் எனச் செந்தமிழால் அழைக்கப்படும் என்று விளக்குவர் டாக்டர் இலக்குவனார். இதிலிருந்து பிரபந்தம் என்று அழைக்கப்பட்ட நூல்கள் இப்பொழுது சிற்றிலக்கியம் என்று அழைக்கப்படுகின்றன. (மேற்படி. பக்.153)

பிரபந்தங்கள் 96 என்னும் வழக்கு கி.பி. 14ஆம் நூற்றாண்டில் எழுந்த சிவந்தெழுந்த பல்லவன் உலாவில் முதன் முதலாகக் குறிக்கப்படுகிறது. தொண்ணூற்றாறு

கோபிர பந்தங்கள் கொண்ட பிரான் என்று கூறுவது அறியத் தக்கது.

பிள்ளைக் கவி முதல் புராணம் ஈறாகத்
தொண்ணூற் றாறெனும் தொகைய தாகும்

என்று 16ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிரபந்த மரபியல் கூறுகின்றது. தொண்ணூற்றாறு வகை பிரபந்தங்களைப் பற்றிய தெளிவான விளக்கத்தை முதன் முதல் தந்தவர் வீரமாமுனிவரே. 1838இல் வெளிவந்த தொன்னூல்விளக்கம் எனும் அவர் நூல் பிரபந்தங்களின் பட்டியலைத் தருகிறது.

இன்றைய நிலையில், நொண்டி நாடகம், துளுவ நாடகம், வில்லுப்பாட்டு, கப்பற்பாட்டு, கும்மி, கோலாட்டப் பாட்டு, கண்ணி போன்ற சிற்றிலக்கியங்களைச் சேர்த்தால் 96 என்பது நூற்றுக்கு மேல் போய்விடும்.

சிற்றிலக்கிய உள்ளடக்கம்

சிற்றிலக்கியங்களின் உள்ளடக்கம் சங்கப் பாக்களைப் போலவோ அல்லது பிற, காப்பிய, பக்தி இலக்கியங்களைப் போலவோ சமுதாயம் தழுவியதன்று. இடைக்காலத்தில் நிலப் பிரபுத்துவ உச்சகட்டத்தில் அரசனை ஆண்டவனாகப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெறுவதை நோக்கமாகக் கொண்டவை.

பரணி மன்னனின் மதிப்பைப் பெறுவதற்காகப் போரின் அழிவைப் புகழ்ந்து பாடும் நூல். உலா நிலப் பிரபுக்களின் காம விகாரங்களைத் தூண்டிவிடும் நூல். கலம்பகம் சமுதாயத்திற்குத் தருவதற்கு உருப்படியான பழைய இலக்கியங்களுள் உருவவாதத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. பிள்ளைத் தமிழ் ஓரளவுக்கு கலைத்திறன் உள்ள இலக்கியம். மாலை என்பது கடவுளைப் புகழ்ந்து பாமாலை சூடும் வகையைச் சார்ந்த இலக்கியம் ஆகும்.

சிற்றிலக்கியம்

சிறிய இலக்கியம் எனப் பொருள்படும் சிற்றிலக்கியம் எனும் இச்சொல்லாட்சி மிகவும் அண்மைக் காலத்திலேயே ஏற்பட்டது. இன்று சிற்றிலக்கியம் எனும் சொல்லால் குறிப்பிடப் பெறும் இலக்கிய வகைகளை ஓரிரு நூற்றாண்டுகளுக்கு முன்னால் பிரபந்தம் எனும் வடமொழிச் சொல்லால் குறித்தனர்.

சங்க இலக்கியங்களான தொகை நூல்களையும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், பெரியபுராணம் போன்றவற்றையும் பேரிலக்கியங்கள் என வழங்கும் வழக்கு உரையாசிரியர் காலத்திலேயே உண்டு. மேலும், காப்பியங்களைப்

பெருங்காப்பியம், குறுங்காப்பியம் என வகைப்படுத்துவதும் ஏறக்குறைய உரையாசிரியர்களின் காலத்திலேயே உருவாகி விட்டதாகவே தெரிகிறது. தண்டியலங்கார ஆசிரியர் பெருங்காப்பியத்திற்கு இலக்கணம் கண்டு மொழிந்துள்ளமையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, காப்பியங்களைப் பெருங்காப்பியம், குறுங்காப்பியம் என வகைப்படுத்தும் வழக்குப் பிற்காலத்தில் அதாவது, கி.பி.12ஆம் நூற்றாண்டுற்கு முன்னதாகவே இருந்தது என்பது தேற்றம். ஆனால், சிற்றிலக்கியம் அல்லது பிரபந்தம் என்று வழங்கும் வழக்கினை அக்காலத்தில் காண முடியவில்லை.

உரையாசிரியருள் இளம்பூரணர், நச்சினார்க்கினியர் முதலானோர் பிள்ளைத் தமிழ், கலம்பகம், தூது உள்ளிட்ட சில இலக்கிய வடிவங்களைத் தம் உரைகளில் ஆங்காங்கே குறிப்பிட்டுச் செல்வராயினும் அவற்றை எல்லாம் சிற்றிலக்கியம் என்றோ பிரபந்தம் என்றோ இன்று வழங்குவது போன்று வழங்கினாரில்லை. ஆக, உரையாசிரியர் காலத்தில் பேரிலக்கியம் மற்றும் பெருங்காப்பியம் என்ற வகைமைப்பாடு இருந்தபோதும் சிற்றிலக்கியம் அல்லது பிரபந்தம் என்ற வகைமைப்பாடு இல்லாதிருந்தது என்றே கொள்ள வேண்டியுள்ளது.

பலரோ ஒருவரோ பாடிய பல பாடல்களைத் தொகுத்து ஒரே நூலாகக் காட்டப் பெறும் இலக்கியங்களைப் பேரிலக்கியம் என்றும் அதிகமான எண்ணிக்கை உடைய பாடல்களைக் கொண்ட தொடர்நிலைச் செய்யுட்களாலான நூல்களைப் பெருங்காப்பியம் என்றும், வழங்கும் வழக்கினைக் கண்ட பிற்காலத்தவர் குறைந்த பாடல் எண்ணிக்கையோடு தனித்தனி இலக்கிய வகைகளாக வழங்கப் பெற்று வரும் தூது, உலா, மாலை, கலம்பகம் முதலானவற்றை அப்பேரிலக்கியங்களிலிருந்து வேறுபடுத்தித் தனி வகையாகக் காட்ட எண்ணி அத்தகு சிறிய இலக்கியங்களை எல்லாம் பிரபந்தங்கள் எனும் பொதுப் பெயரால் வழங்கத் தொடங்கினர்.

பிரபந்தம் எனும் சொல் நன்கு கட்டப்பட்ட இலக்கிய வடிவம் எனும் பொருள் தருதலால் இலக்கியம் எனும் சொல்லுக்கு மாற்றாகவே இச்சொல்லை முதலில் பயன்படுத்தினர் எனலாம். இன்னும் சற்று ஆழ்ந்து நோக்கினால் பிரபந்தம் எனும் வடசொல், தமிழில் தொகை, திரட்டு, எனும் சொற்கள் தரும பொருளிலேயே முதன்முதலில் ஆளப்பட்டது என்பது புலனாகும்.

பன்னிரு ஆழ்வார்கள் பாடிய நாலாயிரப் பாடல்களைத் தொகுத்து ஒரே திரட்டாகத் தந்த நாதமுனியடிகள் அத்திரட்டிற்கு நாலாயிர திவ்ய பிரபந்தம் எனப் பெயரிட்டார். பிரபந்தம் எனும் வடசொல் முதன்முதலாக இவராலேயே தமிழில் வழங்கப்பட்டுள்ளது. (சிற்றிலக்கிய ஆராய்ச்சி - முதல் தொகுதி - இரா. கண்ணன் - ப. 22)

நாலாயிர திவ்யபிரபந்தம் என்பது நாலாயிரம் பாடல்களால் ஆன இனிய நூல் எனப் பொருள்படுதலால் ஈங்கு பிரபந்தம் எனும் சொல், நூல் அல்லது இலக்கியம் எனும் பொர்ுளில் ஆளப்பட்டுள்ளமை புலனாகும். அவ்வாறே நாலாயிரப் பாடல்களின் தொகுப்பாக இந்நூல் இருப்பதால் பிரபந்தம் எனும் சொல் திரட்டு அல்லது தொகை எனும் பொருளையும் தரும். பிரபந்தம் எனும் சொல்லுக்கு நன்கு கட்டப்பட்ட இலக்கியம் என்ற பொருள் உள்ளமையால், பலவாகக் கிடக்கம் பலவகை மற்றும் பலர் யாத்த பாடல்களைத் திரட்டி ஒன்றெனக் கட்டிய நூலான ஆழ்வார்களின் பாடற் தொகுப்பிற்குப் பிரபந்தம் என்ற சொல்லைத் திரட்டு அல்லது தொகை எனும் பொருள்படவே நாதமுனியடிகள் வழங்கினார் எனக் கருதுவது பிழையுடையதாகாது. எனவே, பிரபந்தம்

எனும் இச்சொல் திரட்டு அல்லது தொகை. எனும் பொருள்படவும் கையாளப்பெற்றது எனலாம்.

பிரபந்தம் என்ற சொல்லாட்சி தமிழில் பெறுகிற்று. இலக்கியம் எனும் நல்ல தமிழ்ச் சொல்லின் இடத்தைப் பிரபந்தம் எனும் வடசொல் கைப்பற்றித் தக்க வைத்துக் கொண்டது. பிரபந்தம் எனும் சொல் ஒருகாற் பேரிலக்கியம் என்னும் மற்றொருகாற் இலக்கியம் என்றும் பொருள் தருமாறு தமிழில் வழங்கி வருதலைக் கண்ட பிற்காலத்தவர் தூது, உலா, கலம்பகம் உள்ளிட்ட சிறிய இலக்கியங்களைச் சில்லறைப் பிரபந்தங்கள் எனவும் வழங்கத் தலைப்பட்டனர். சில்லறை எனும் சொல் சிலவாக அறுக்கப்பட்டது எனப் பொருள் தருதலால் சிறிய இலக்கியம் என்பதை உணர்ந்த சில்லறைப் பிரபந்தம் என வழங்கினர் (மேற்படி. ப.23). எனவே பிரபந்தம் எனும் சொல் இன்று கருதுமாறு சிற்றிலக்கியம் என்ற பொருளை எக்காலத்தும் தரவில்லை என்பதை உணர வேண்டும் பாட்டியல் நூல்கள் கூட பிரபந்தம் என்னும் சொல்லை இலக்கியம் எனும் பொருளிலேயே ஆண்டுள்ளன. எனவேதான் அப்பாட்டியல் நூல்கள் பெருங்காப்பியம், காப்பியம், புராணம் ஆகிய இலக்கிய வகைகளையும் பிரபந்தங்கள் என்றே குறிப்பிட்டுள்ளன. இலக்கியங்களை

அவற்றின் அளவு கருதி வகைமை செய்தோர், இன்று சிற்றிலக்கியங்கள் எனச் சுட்டப்பெறும் இலக்கிய வடிவங்களைச் சில்லறைப் பிரபந்தங்கள் என்றே வழங்கினர் என்பது நாம் கருத்தில் கொள்ள வேண்டியது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தனித்தமிழ் இயக்கம் எழுந்தபோது சில்லறைப் பிரபந்தம் என்ற பெயருக்குப் பதிலாகத் தனித்தமிழ்ச் சொல்லான சிற்றிலக்கியம் எனும் பெயர் வழக்கிற்கு வந்தது.

3. சிற்றிலக்கியப் போக்குகள்

ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் அமைந்த சமூக அமைப்பு வேறு. ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நிலவி வந்த நிலவுடைமைச் சமூகம் வீழ்ச்சியுற்றுத் தொழில் வழிப்பட்ட முதலாளித்துவச் சமூக அமைப்பு இருபதாம் நூற்றாண்டில் தோற்றம் கொள்கிறது. இதன் காரணமாகச் சமூக விழுமியங்கள் பெரும் மாறுதல்களுக்கு உள்ளாகின்றன. இதனால் இலக்கிய அமைப்புகளிலும் உள்ளடக்கங்களிலும் பெரும் மாறுதல்கள் தோன்றின.

பொருளாதார அமைப்பில் உண்டான மாற்றம் மறுமலர்ச்சி அரசியல் கலை இலக்கிய அமைப்புகள் இயக்கங்களாக மாறித் துணை செய்தது. இருபதாம்

நூற்றாண்டுத் தொடக்கக் காலங்களில் தமிழகத்தில் நிலவிய சமூக மாற்றமும் சிற்றிலக்கிய போக்கிற்கு வழிவகுத்தது எனலாம். தமிழகத்தைப் பொறுத்த வரையில் சமயமே பல்வேறு காலங்களில் சமூகப் போராட்டத்தை நிகழ்த்தி உள்ளது. இருபதாம் நூற்றாண்டின் சிற்றிலக்கியங்களில் பெரும் பகுதி சமய இலக்கியங்களே. இக்காலச் சிற்றிலக்கியத்தை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை சமயம் சார்ந்த சிற்றிலக்கியம் மற்றொன்று சமயஞ் சாரா சிற்றிலக்கியம் என பகுக்கலாம். ஏறத்தாழ கி.பி.மூன்றாம் நூற்றாண்டு தொடங்கித் தமிழ்ச் சமுதாயம் சமய முதன்மைச் சமுதாயமாகத்தான் திகழ்ந்துள்ளது. பௌத்தம். சமணம். சைவம். வைணவம். இசுலாம். கிருத்துவம் என ஒவ்வொரு காலத்திலும் சமயம் முதன்மை பெற்று வந்துள்ளது.

ஒரு சமுதாயத்தில் எது முதன்மை பெறுமோ அல்லது முன்னிறுத்தப்படுமோ அது இலக்கியப் பாடுபொருளாவது மரபு. தவிர்க்க முடியாததும் கூட. அவ்வகையில் எறத்தாழ பதினேழு நூற்றாண்டுகள் தமிழகத்தில் சமயங்கள் தாம் பெரு வீச்சில் ஆட்சி செலுத்தி உள்ளன. எனவே, சமயக் கடவுளரும் சமயத்

தலைவர்களும் சமயத் தத்துவங்களும் இலக்கிய உரு எய்துவது எளிதாகவும் மரபாகவும் அமைந்து விட்டது. இந்நிலை இருபதாம் நூற்றாண்டிலும் தொடர்வது ஆயிற்று. இருபதாம் நூற்றாண்டுச் சமயச் சிற்றிலக்கிய வளர்ச்சிக்கு இரு அடிப்படைகள் உண்டு.

அவை,

1. தொன்று தொட்டு வரும் மரபுவழியே சிற்றிலக்கியங்களை யாக்க முற்பட்டபோது முந்தை மரபு சமய உறவுடைய மரபாக இருந்தமை.
2. இருபதாம் நூற்றாண்டின் சமூக மறுமலர்ச்சி விஞ்ஞான வளர்ச்சி ஆகியவற்றிற்கு எதிராகச் சமயம் தன் நிலைபாட்டை வலுப்படுத்த மேற்கொண்ட முயற்சி. சமயத்தின் வீச்சிற்கும் வளர்ச்சிக்கும் ஏற்ப சமயச் சிற்றிலக்கியங்கள் பெருகி வருவதையும் உணர முடிகிறது.

சிற்றிலக்கிய எண்ணிக்கை

தமிழில் இந்நூற்றாண்டு வரையிலும் பிறந்துள்ள சிற்றிலக்கியங்களை எண்ணிட்டு வரையரைக்கப்படுதலும் இயலுவதன்று. காலந்தோறும் புதிது புதிதாகக்

கிளைக்கின்ற ஒன்று எண்ணிற்குள் அடங்குமோ? முன்னையோர் சிலர் பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாகத் தொண்ணூற்றாறு சிற்றிலக்கியங்கள் உள என்றனர். இந்த எண்ணிக்கை எந்த வகையில் நோக்கினும் பொருந்தவில்லை.

சிற்றிலக்கியங்கள் பலவற்றின் இயல்புகளை விளக்கும் பன்னிருபாட்டியல், வெண்பாப்பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், நவநீதப்பாட்டியல் முதலிய பாட்டியல் நூல்களில் 96 சிற்றிலக்கியங்களின் இலக்கணம் தரப்படவில்லை. அன்றியும் ஒரு நூலில் உள்ளவாறு மற்றொன்றில் இல்லை. இலக்கிய வகைகளும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. பிரபந்த மரபியல் என்ற ஓர் இலக்கிய நூல் 96 என்பதனை நிரப்ப முயன்றுள்ளது(சிற்றிலக்கிய வளர்ச்சி - மு. சண்முகம் பிள்ளை, ப.4).

பிரபந்த எண் வரையறை

சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும் எனும் கருத்து இன்று மிகப் பரவலாக வழங்கி வருகிறது. பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும் என்ற கருத்துப் பதினேழாம் நூற்றாண்டிலிருந்து வழங்கி வருவதை இலக்கியச் சான்றுகள் மூலம் அறிய முடிகிறது.

ஏறக்குறைய பதினேழாம் நூற்றாண்டின் இறுதியிலோ அதற்குச் சற்று முன்னரோ பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும் எனும் கோட்பாடு தமிழ் இலக்கிய உலகில் தோன்றிற்று எனலாம். பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான வீரமாமுனிவர் தாம் எழுதி வெளியிட்ட சதுரகராதியில் தொண்ணூற்றாறு இலக்கிய வகைகளைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

படிக்காசுப்புலவரின் காலந் தொடங்கி மெல்ல மெல்ல வளர்ந்து வந்த பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும் எனும் கோட்பாடு இருபதாம் நூற்றாண்டில் சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும் எனும் புதிய கோட்பாடு எழ அடித்தளமாயிற்று. பிரபந்தங்கள் என்ற சொல் பொதுவாக இலக்கியங்கள் என்ற பொருளிலேயே வழங்கப் பெற்று வந்திருப்பினும், பிரபந்தங்கள் எனும் சொல் சிற்றிலக்கியம் எனும் பொருளைத் தரும் எனப் பிற்காலத்தவரால் பிழைப்பட உணரப்பட்டமையால் பிரபந்தங்கள் (இலக்கியங்கள்) தொண்ணூற்றாறு வகைப்படும் எனப் பாட்டியலார் முதலானோர் கருதிய கருத்து இவ்விருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும் எனக் கருத இடம் தந்தது. உண்மையில் இலக்கிய வகைகள் தொண்ணூற்றாறு

என்ற கோட்பாடு எவ்வகையானும் பொருந்தாது என்பதையும் இலக்கிய வகைகள் காலந்தோறும் புதிது புதிதாக எண்ணிறந்த அளவில் எழுந்துள்ளமையும் அறிஞர் பலரும் நன்கு எடுத்துக் காட்டியுள்ளனர். எனவே தொண்ணூற்றாறு எனும் இவ்வெண் வரையறை பற்றிய கோட்பாடு பொதுவாக வழங்கி வரும் ஒரு வழக்கே அன்றிப் பொருள் புணர்ந்த கோட்பாடன்று என்பது உணர வேண்டுவதாகும்.

சிற்றிலக்கிய தனித்தன்மை

ஒரு தனிப்பாடல் கூட ஓர் இலக்கியமாகலாம். ஆற்றுப்படை வாழ்த்து, கையறுநிலை முதலிய பொருள்களில் வரும் தனிப்பாடல்கள் தனித்தனி இலக்கியமே. பிரபந்தம் என்பது ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் அடங்குவதன்று. பிரபந்த இலக்கணம் உரைக்கும், பாட்டியல் நூல்கள் பெருங்காப்பியம் உட்பட எல்லா இலக்கியங்களையுமே உள்ளடக்கி விளக்கம் தருகின்றன. ஆனால், இன்றைய வழக்கில் பிரபந்தம் என்பது பெருங்காப்பியம் தவிர ஏனைய இலக்கிய வகைகளைச் சுட்டுவதற்கே வழங்குகின்றது. பிரபந்தம் என்பதனைச் சிற்றிலக்கியம் என்னும் பெயராலும் இக்காலத்தில் வழங்கி வருகின்றனர்.

ஒவ்வொரு காலத்தும் எழுந்த நூல்கள் அந்தந்தக் காலத்து மக்களின் வாழ்க்கைச் சூழலை ஒட்டி அமைதல் இயல்பே. கால ஓட்டத்தில் மக்களின் நோக்கும், போக்கும் மாறுபடுவதும் இயல்பே. இலக்கியங்கள் காலத்திற்கேற்பக் கோலம் பல பூண்டு கருத்துகளிலும் வேறுபட்டு வளர்ந்து வந்துள்ளன.

நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கானது சிற்றிலக்கியங்களிலும் சிறப்பாக இடம் பெற்றுள்ளது. பள்ளு, குறவஞ்சி என்ற இரு இலக்கியங்களும் நாட்டுப்புற இலக்கியமே என்று சொல்லும் வகையில் செல்வாக்குற்று நாட்டுப்புற இலக்கியத்தையே மூலமாகக் கொண்டு முளைவிட்டவை. ஏனையவற்றில் நாட்டுப்புற இலக்கியத்தின் கூறுகளையும் குறிப்புகளையும் காணலாம்.

4. மாலை நூல் பற்றிய வகைப்பாடுகள்

மாலை என்னும் சிறு நூல் ஒரு பொருளைக் குறித்துப் பல செய்யுள்கள் கூறுவதாகும். இது பலவகைப்படும். அவை பின்வருமாறு: பன்மணிமாலை, இணைமணி மாலை, இரட்டை மணி மாலை, மும்மணி மாலை, நான்மணி மாலை, வருக்க மாலை, மெய்க்கீர்த்தி மாலை, வசந்த மாலை, நவமணி அனுராக மாலை, என்று

மாலைகளை பல வகையாக வகுக்கலாம் (கலைக்களஞ்சியம் - தொகுதி எட்டு - தமிழ் வளர்ச்சிக் கழகம், ப.27).

பொதுவாக மாலை என்று வழங்கப்பெறும் பிரபந்தத்தின் பொருளை ஆராயும்போது பூக்களால் தொகுக்கப் பெறும் மாலையை நாம் நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும். ஒரே விதமான பூக்களைக் கொண்டும் மாலை தொடுக்கலாம். பல நிறங் கொண்ட பல்வேறு பூக்களையுஞ் தழைகளையுங் கொண்டும் மாலை தொடுக்கலாம். அதே போன்று ஒரே பொருளை முன்னிட்டு, அப்பொருளைப் பற்றிய பல்வேறு அம்சங்களைக் குறித்து ஒரே வகைப் பாவைக் கொண்டும் இந்நூலைப் பாடலாம். பல்வேறு பாக்களைக் கொண்டும் பாவினங்களைக் கொண்டும் பாடலாம். குமரகுருபரர் பாடிய மீனாட்சி அம்மை இரட்டை மணிமாலை என்பது வெண்பாவும் கட்டளைக் கலித்துறையுமாக இருபது பாடல்களைக் கொண்டு விளங்குகிறன்றது. மாலை வகைச் சிறுநூல்கள் சொல்லழகும் பொருளழகும் கொண்டு விளங்குகின்றது. மாலை வகைச் சிறுநூல்கள் சொல்லழகும் பொருளழகும் மிக்கு விளங்கும்.

மாலை என்பதற்கு மண்டல புருடர் சூடாமணி நிகண்டின் பதினொன்றாம் தொகுதியில் ஒரு சொல் பலபொருள் விளக்கம் கூறும் கருத்துகள்:

மாலையே இரவோடு அந்தி
மாலிகை ஒழுங்கு நாற்போர்

மாலையின் பொருள் விளக்கங்கள்

இரவு-இராத்திரி
அந்தி- அந்திப்பொழுது
மாலிகை- மாலைப்பொழுது
ஒழுங்கு- ஆவனி

என்ற பொருள்களை மாலைக்கு சூடாமணி நிகண்டு சுட்டி நிற்கிறது.

பழைய தமிழ் அகராதியான பிங்கல நிகண்டு மாலைப் பற்றி கூறும் கருத்தாக்கங்கள் வானவர் வகை என்ற பகுப்பில் கூறும் மாலை பற்றிய கருத்தாக்கம்:

மாலையின் பெயர் - நீபமுஞ் செச்சையு மாலையாகும்

பெயர் பிரிவு - நீபம், செச்சை

பிங்கல முனிவர் அநுபோக வகை என்ற பகுப்பில் மாலைப் பற்றி கூறும் கருத்துகள்:

மாலையின் பெயர்: சுக்கை தொடையை றொங்கல் கத்திகை -யலங்கல் கண்ணி தெரியறாரே, பணியல்தாம

மொலியல் சுட்டு - கோதை மஞ்சரி மாலையின் கூற்றேயாகும்.

பெயர் பிரிவு: சுக்கை, தொடையல், தொங்கல், கத்திகை, அலங்கல், கண்ணி, தெரியல், தார், அணியல், தாமம், ஒலியல், சூட்டு, கோதை, மஞ்சரி.

பிங்கலரின் ஒரு சொல்பொருள் வகை என்ற பகுப்பில் கூறும் மாலை பற்றியான செய்திகள்:

மாலை - இரவுந் தொகுத்த தொடையலு மந்தியும்
வரன்முறை யொழுக்கமு மியல்பு மாலை

பெயர் பிரிவு: எ.து. இரா, தொகுத்த மாலை, அந்திப்பொழுது, வரன் முறை, ஒழுக்கம், இயல்பு என்ற பொருளை மாலைக்கு பொருளாக்கிக் கூறுகிறது.

பிரபந்தங்களை 96 என்று கூறுவதுண்டு. ஆனால், 96 வகையை மீறியும் புதிய வகைகள் கால மாற்றத்தால் வந்துகொண்டே இருக்கிறது. இருப்பினும் 96 வகை என்ற சொற்பயன்பாடு பழமை வாய்ந்ததாய் உள்ளது. அவை முறையே...

1. அகப்பொருட்கோவை
2. அங்க மாலை
3. அட்டமங்கலம்

4. அநுராக மாலை
5. அரசன் விருத்தம்
6. அலங்கார பஞ்சகம்
7. ஆற்றுப்படை
8. இணைமணி மாலை
9. இரட்டை மணி மாலை
10. இயன்மொழி வாழ்த்து
11. இருபா இருபது
12. உலா
13. உலா மடல்
14. உழத்திப் பாட்டு
15. உழிஞை மாலை
16. உற்பவ மாலை
17. ஊசல்
18. ஊர் நேரிசை
19. ஊர் வெண்பா
20. ஊரின்னிசை
21. எண் செய்யுள்
22. எழு கூற்றிருக்கை
23. ஐந்திணைச் செய்யுள்
24. ஒருபா ஒருபது
25. ஒலியலந்தாதி
26. கடிகை வெண்பா

27. கடை நிலை
28. கண்பெடை நிலை
29. கலம்பகம்
30. காஞ்சி மாலை
31. காப்பியம்
32. காப்பு மாலை
33. குழமகன்
34. குறத்திப் பாட்டு
35. கேசாதி பாதம்
36. கைக்கிளை
37. கையறுநிலை
38. சதகம்
39. சாதகம்
40. சின்னப்பூ
41. செருக்கள வஞ்சி
42. செவியறிவுறூஉ
43. தசாங்கத் தயல்
44. தசாங்கப் பத்து
45. தண்டக மாலை
46. தாண்டகம்
47. தாரகை மாலை
48. தானை மாலை
49. தும்பை மாலை

50. துயிலெடை நிலை
51. தூது
52. தொகை நிலைச் செய்யுள்
53. நயனப் பத்து
54. நவமணி மாலை
55. நாம மாலை
56. நாற்பது
57. நான்மணி மாலை
58. நூற்றந்தாதி
59. நொச்சி மாலை
60. பதிகம்
61. பதிற்றந்தாதி
62. பயோதரப் பத்து
63. பரணி
64. பல்சந்த மாலை
65. பவனிக் காதல்
66. பன்மணி மாலை
67. பாதாதிகேசம்
68. பிள்ளைக் கவி
69. புகழ்ச்சி மாலை
70. புறநிலை
71. புறநிலை வாழ்த்து
72. பெயர் நேரிசை

73. பெயரின்னிசை
74. பெருங்காப்பியம்
75. பெருமகிழ்ச்சி மாலை
76. பெருமங்கலம்
77. போர்க்கெழு வஞ்சி
78. மங்கல வள்ளை
79. மணிமாலை
80. மதுகாஞ்சி
81. மும்மணிக் கோவை
82. மும்மணி மாலை
83. மெய்க்கீர்த்தி மாலை
84. வசந்த மாலை
85. வரலாற்று வஞ்சி
86. வருக்கக் கோவை
87. வருக்க மாலை
88. வளமடல்
89. வாகை மாலை
90. வாதோரண மஞ்சரி
91. வாயுறை வாழ்த்து
92. விருத்த விலக்கணம்
93. விளக்கு நிலை
94. வீரவெச்சி மாலை
95. வெற்றிக் கரந்தை மஞ்சரி
96. வேனில் மாலை

மாலை நூல் பதிப்பு

மாலை, தொகுக்கப்பட்டது, தொகுத்த பூந்தொகை, மாதரணி வடம், பிரபந்த வகை, வரிசை, பாசம், விறலி, பெண், போன்ற பல பொருண்மைகளைத் தருகின்றது. மலர்களால் தொகுக்கப்பட்ட பூந்தொடையைக் குறிக்கும் நிலையில் இச்சொல்லின் பயிற்சி சங்ககால இலக்கியத்தில் அமைகிறது. வரிசையாக மலர்கள் மட்டுமன்றி பாவும் தொகுக்கப்பட்ட நிலையில் பூமாலை போன்று பாமாலையும் உருவாயிற்று. ஏதேனும் ஒரு பொருள் பற்றிப் பல பாடல்கள் தொடர்ந்து அமைந்த போது அவற்றிற்கு மாலை என்ற பொதுப் பெயர் வழங்கப்பட்டது.

பல பாடல்களின் தொகுதி கோவை எனச் சுட்டப்பட்ட பொதுநிலை இங்கு மாலையிலும் அமைகின்றது. மலர்மாலையும் மணிமாலையும் பிறவும் அமைப்பு நிலையில் பல் வகையானவை போன்று இம்மாலை இலக்கிய வகையும் பல்கிப் பெருகி அமைகின்றது.

பல்வகைப் பிரபந்தங்களின் தோற்றக் களனாக இருந்த பக்தி இலக்கியக் காலம் இவ்வகையையும் அளிக்கின்றது. மூலரின் திருமந்திர மாலையும், அப்பரின் அங்க மாலையும், ஆழ்வாரின் திருமாலையும்,

அம்மையாரின் திருவிரட்டை மணிமாலையும், நம்பியின் ஏகாதச மாலையும், உலா மாலையும், பலரியற்றிய திருவள்ளுவ மாலையும், எனப் பல மாலைகள் முகிழ்த்துப் பின் பல புதுமாலை வகைகளை வகுத்தன.

பாட்டியல்கள் பொருள், யாப்பு, அமைப்பு, எண்ணிக்கை போன்ற பல அடிப்படையில் அமைந்த மாலை பலவற்றைத் தருகின்றன. பொருளாலும் வடிவாலும் வேறுபடுபவை மாலை என்ற பெயர் நிலையால் ஒருகூறு ஒப்புமை காட்டி நிற்கின்றன. பல செய்யுட்கள் தொடர்ந்து வரல் காரணமாகவும் பல அடிகள் தொடர்ந்து வருதலாலும் மலர்ப் பெயரால் அமைந்தாலும் பொருள் தொடர்ச்சி போன்றவற்றாலும் மாலைப் பெயர் இவற்றில் பொருந்துகின்றது.

நாமமாலை, புகழ்ச்சி மாலை, பெருமகிழ்ச்சி மாலை, தாரகை மாலை, செந்தமிழ் மாலை, அங்க மாலை, தானை மாலை, அனுராக மாலை போன்ற பல பொருள் நிலை மாலைகள், புறத்துறையின் அடிப்படையில் எழுந்த வெட்சி மாலை, கரந்தை மாலை, வஞ்சி மாலை, நொச்சி மாலை, உழிஞை மாலை, தும்பை மாலை, வாகை மாலை போன்ற பொருள் நிலையின. வஞ்சிப்பாவில் வருவதால் போர் புரிவோர் சூடிய மலர், மாலை காரணமாக மாலைப்

பெயர் பெற்றனவோ என எண்ணலாம். வெண் புணர்ச்சி மாலை, வஞ்சி மாலை போன்றன யாப்பால் பெயர் பெற்றன. பல்வகை யாப்பு விரவும் நிலையில் இணை மணி மாலை, இரட்டை மணிமாலை, மும்மணி மாலை, நான்மணி மாலை, நவமணிமாலை போன்ற வகைகள் உருவாகியுள்ளன. பல்சந்த மாலை, கலம்பக மாலை, வருக்க மாலை போன்றன ஒரு குறிப்பிட்ட அமைப்பு காரணமாகத் தனிவகையாக உருவாகியுள்ளன.

எண்ணால் பெயர்பெறும் மாலைகளைப் பற்றியும் பாட்டியல் நினைக்கின்றன. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றினைத் தனிப்பொருண்மையாக்கி வெண்பா அல்லது கலித்துறையில் முப்பது, நாற்பது, எழுபது, தொண்ணூற்றாறு செய்யுட்கள் வரும்போது அவை பொருளால் மட்டுமின்றி எண்ணாலும் பெயர் பெறும் நிலை இங்குக் குறிக்கப்படுகின்றது.

பாட்டியல் கூறும் இப்பல்வகை போன்ற தமிழ் இலக்கியங்களை நோக்கும் போதும் பலவகை மாலைகள் அமைவது தெரிகின்றது. இடமாலைகள், இறைவன் பேரில் மாலைகள், அடியவர், தலைவர் மேல் மாலைகள் என பக்தி மாலையும் புகழ் மாலையும் மிகுதியாகவுள்ளன. அல்லியரசாணி மாலை, புலேந்திரன் களவு மாலை,

போன்று கதை கூறும் மாலைகளும் மக்கள் இலக்கிய நிலையில் காணக்கிடக்கின்றன.

மாலையிலக்கியத்துடன் அணிச்சிறப்பும் மிகைக்கவிதையும் கலந்து வெளிப்பட்ட நிலையில் சிலேடைமாலை, அந்தாதி மாலை, சித்திரக் கவி மாலை, போன்றனவும் அமைகின்றன. இலக்கணம் சுட்டிய மாலைகள் காணப்படாதும், சுட்டாத மாலைகள் அமைந்தும் உள்ளமை குறிப்பிடத் தக்கது. தரு மாலைக்குச் சுட்டிய இலக்கணம் அவ்வகை இலக்கியத்தில் சிறிது மாறுபட்டும் பெரிதும் வேறுபட்டும் அமைவதும் நினைக்கத்தக்கது.

அன்றியும் மாலையின் வகைப் பெறாது பொதுப் பெயருடன் மாலை என அமையும் நூல்கள் பல காணப்படுகின்றன. ஒரு பொருளைப் பற்றிய பல பாடல்கள் ஒரு தலைமை குறித்த பல பாடல்கள். ஒருவரியற்றிய பல பாடல்கள் மாலை எனப் பொதுமை பெறுகின்றன. இத்தகு மாலைகள் சில அந்தாதித் தொகை பெற்றோ, பாடல் தோகை ஈர்யாப்புப் பெற்றோ அமைவது ஒரு பாடமாக, பாடல்களிடையே இத்தகு இணைவுக் கண்ணிகள் பெறாது அமைதலும் காணப்படுகின்றது (தமிழ் இலக்கிய வகையும் வடிவமும்- ச.வே.சுப்பிரமணியன்)

மாலை இலக்கியங்கள் சில பாடல்களின் ஈற்றுத் தொடரால் பெயர் பெறும் தன்மையின. ஒரு மாலை நூலின் பாடல்களனைத்தும் ஒரே போன்று முடிதல் எனும் பெரும்பான்மை பொதுத்தன்மை இங்கு நினைவுகூறத் தக்கது. ஐங்கரமாலை எனவும் பயங்கர மாலை எனவும் தனிவகைகள் கருதக்கூட இத்தகு நூல்கள் காரணமாகலாம்.

கவிராசன் கந்தப்பனின் திருத்தணிகை சந்நிதி முறை தரும் திருத்தணிகை ஐங்கர மாலை 100 கலித்துறையும் இறுதி வெண்பாவும் கொண்டு நூறு பாடலும் 'ஐங்கரனே' என முடிந்தும் காணப்படுகிறது. அதே போன்று, ஆசிரியர் அறியப்படாத, மதுரைச் சொக்கநாதரது அறுபத்து நான்கு திருவிளையாடல் பயங்கரமாலை, கட்டளைக் கலித்துறையில் காப்பும் 64 பாடலுமாக அமைந்து 'பயங்கரனே' எனும் ஈறொப்பக் காட்டுகிறது. பெரும்பாலும் இறையைப் பெயர் சார்த்தியும் இடம் சார்த்தியும் பாடும் போதும் இத்தகு பெயரடைகள் பொருந்தல் கூடும். தண்டபாணி சுவாமிகளின் திருவரங்கத் திருவாயிரம் தருகின்ற சீரங்க நாயக மாலை 51 கட்டளைக் கலித்துறைகளாலாகி, சீரங்க நாயகனே என ஈறொப்புத் தருகின்றது.

இத்தகைய ஈறொப்போ, பாடல்களை இணைக்கும் பிறிதொரு உத்தியான அந்தாதியோ இல்லாத நிலையிலும் பல மாலைகள் பிச்சை யிபுறாகீம் புலவரின் திருமதீனத்து மாலை காப்பு உட்பட 101 கட்டளைக் கலித்துறையிலமைந்து இப்பான்மை காட்டுகின்றது. ஆசிரியர் அறியாத திருக்காளத்தி நாதர் இட்டகாமிய மாலையும் இதுபோல் நேரிசை வெண்பாக் காப்பும் 49 கட்டளைக் கலித்துறையும் கண்டு இயல்கின்றது.

யாப்பு அமைப்பு

யாப்பு அடிப்படையில் கணிக்க கூடிய சில பிரபந்தங்களும் அமைகின்றன. இலக்கிய வெளியீட்டில், புயவடிமான யாப்பு தனியிடம் பெறுகின்றது. பொருளுக்கே முதன்மை ஏற்பட்ட காலம் யாப்பிலக்கணத்தைத் தனியாக வளர்ந்தது. முதலில் ஏற்பட்ட இயல்பு வடிவங்களும், புலமை மிக்கோர் புகுத்திய சோதனை வடிவங்களும் பயிற்சி காரணமாக நிலைபெற்றுப் பிற்காலத்தில் வடிவ வரையறை பெற்றன. மூத்த முதல் இலக்கணமான தொல்காப்பியம் யாப்பு வடிவங்களைக் கூறியதுடன் அவற்றுள் சிலவற்றிற்குரிய பொருண்மையையும் இணைத்துக் கூறுகின்றது. வடிவமும் பொருளும் சார்ந்தும் இணைந்தும் அமைந்த ஒரு காலப் பகுதியை இதில் காண முடிகிறது.

பரிபாடல் காமங்கண்ணிய நிலையினது எனவும், கலியும் பரிபாடலும் புலனெறி வழங்கின எனவும், ஒத்தாழிசைக் கலிப்பா முன்னிலையில் தேவரைப் பரவி வரும் எனவும், நூற்பாவுக்கும் அறம் முதலாகிய மும்முதற் பொருளும் வாழ்த்தியல் வகையும் உரியன எனவும் விதிக்கும் நிலையும், புறநிலை, வாயுறை, செவியறிவுறூஉ, அவையிடக்கியல் போன்றன கலியும் வஞ்சியும் பெறா என விலக்கும் நிலையும் பிறவும் அமைகின்றன.

பாவுக்கும் பொருளுக்கும் நேரடித் தொடர்பமைந்த இந்நிலை கால்ந்தோறும் மாறுபட்டும் புது வடிவங்களும் புதுமைப் பொருள்களும் தோன்றியுள்ளன. இலக்கிய வகைகளை ஆக்குகின்ற படைப்பாசிரியர் இக்காரணம் பற்றி அவற்றிற்குப் பொருளாலும் அன்றி யாப்பாலும் பெயர் சூட்டுகின்றனர். யாப்பால் பெயர் பெறும் இலக்கிய வகைகள் பல என்பதால் அவை தனியே கருதப்படுகின்றன.

பாவுக்கு முதன்மை அளிக்கப்பட்டதால், ஒருபா ஒருபஃது, இருபா இருஃது இணைமணிமாலை, இரட்டைமணி மாலை, மும்மணி மாலை, மும்மணிக்கோவை, நான்மணி மாலை போன்ற பல

இலக்கிய வகைகள் அமைகின்றன. இவை தவிர பாப்பெயரும் பொருளும் இணைந்து உருவாகிய இலக்கிய வகைகள் பலவற்றைப் பாட்டியல் குறிப்பிடுகிறன்றன.

இன்னிசைத் தொகை, விருத்த இலக்கணம், ஐம்படை விருத்தம், நாழிகை வெண்பா, இல்லற வெள்ளை, மங்கல வெள்ளை, ஊரின்னிசை, பெயரின்னிசை, ஊர் நேரிசை, பெயர் நேரிசை, ஊர் வெண்பா, தொகை வெண்பா போன்ற பல இந்நிலையில் இலக்கண ஆசிரியரால் குறிக்கப்படுகின்றன. மேலும், மருட்பா, தாண்டகம், போன்றன இன்னும் சிறிது வேறுபட்டு யாப்பு அமைப்படிப்படையில் வகுக்கப்பட்ட இலக்கியமாக அமைகின்றன.

தமிழ் இலக்யிக வகைகளை நோக்கும் போது, மேற்குறிப்பிட்ட நிலைகளன்றி இன்னும் பல்வேறுபட்ட கோணத்திலும் அடிப்படையிலும் யாப்பு வடிவம் இலக்கியப் பெறராக அமைகின்றது. சிற்றிலக்கிய யாப்பால் மட்டும் பெயர் பெற்றும், சில யாப்பும் பொருண்மையும் இணைந்து பெயராகியும் இயல்கின்றன.

யாப்பால் பெயர் பெறும் நிலை தனிநூலுக்கு ஏற்படு முன் அது தொகை நூலுக்கு ஆகி வந்துள்ளமையைச்

சங்கத் தொகைக் காட்டுகின்றன. பாவும், பாவகையும், பாவினமும் நூற்பெயராகிப் பிரபந்த வகை அமைப்பதுடன், தொடையும் அப்பான்மை பெறக் கூடும் என்பதை 'அந்தாதி' காட்டுகிறது. அன்றியும், அந்தாதி, தன்னில் பல்வேறு வகைப்பட்ட பிரபந்தப் பெருக்கைக் கொள்வதும் சிறப்பாகச் சுட்டற்குரியது. தொடை மட்டுமன்றி அடி கூட வகையடிப்படை ஆதலைக் கழிநெடில் காட்டுகிறது.

1. அடைக்கல மாலை - வீரமாமுனிவர்.
2. அம்பிகை மாலை - மதுரை மீனாட்சி அம்மன் பேரில் அம்பிகை மாலை - குலசேகர பாண்டியன்.
3. அம்மானை மாலை - மறைக்காட் டம்மானை மாலை
4. அற்புத மாலை - திருச்செந்தூர் கந்தர் அற்புத மாலை - பன்னிருகைப் பெருமாள் கவிராயர்.
5. அஷ்டக மாலை - அம்பாள் அஷ்டக மாலை - காமாட்சி தாசர் ஆசிரிய மாலை.
6. இணைமொழி யமக மாலை - தில்லை கோவிந்த தாசப் பெருமாள் இணைமொழி யமக மாலை - இராமசாமி நாயுடு.
7. இரட்டைச் சொல் யமக மாலை - திருத்தணிகை இரட்டைச் சொல் யமகமாலை- புரசை சபாபதி முதலியார்.

8. ஏகமணி மாலை - பாப்பம்ஸ் சாலை விநாயகர் மீது ஏகமணி மாலை.

9. கலித்துறை மாலை

10. கலி விண்ணப்ப மாலை - இராமநாதபுரம் அரண்மனையில் வீற்றிருக்கும் இராச ராசேசுவரி மீது கலி விண்ணப்ப மாலை.

11. சப்த மாலை - குமரேசர் சப்த மாலை - நாராயிணசாமி நாயக்கர்.

12. சரண மாலை (சபரிமலை அய்யப்ப ஸ்வாமி சரணமாலை- எஸ்.எம். சுந்தரம் அய்யங்கார்)

13. சரிதமாலை (சக்கரவர்த்தி திருமகன் சரித மாலை - ரெ.திருமலை அய்யங்கார்)

14. சிலேடை வெண்பா மாலை (தணிகை சிலேடை வெண்பா மாலை - கந்தப்பையர்)

15. தசகமாலை - (ஆளுடைய பிள்ளையார் தசகமாலை)

16. தசமணி மாலை (ஞான சம்பந்தகுரு தசமணி மாலை - நிரம்ப வழகிய தேசிகர்)

17. திருப்பணிமாலை (கோயில் திருப்பணி மாலை)

18. திருவடி மாலை (திருக்கச்சிக் குமர கோட்டக்கடவுள் திருவடி மாலை - ப. சோணாசல பாரதி)

19. திருவடிப் புகழ் மாலை (திருநாவுக்கரசர் திருவடிப் புகழ் மாலை - சுவர்ண காளீச்சுரன்)

20. திருவருள் மாலை (பெரியகுளம் என்னும் திருக்குளத்தை முருகக் கடவுள் மீது திருவருள் மாலை - ஒதுவா மூர்த்தி)
21. துதிமாலை - (இன்னிசைத் துதி மாலை- ஆர். கௌரி)
22. தொழுகை மாலை (சாமுநயினா லப்பை ஆலிம் ஒலியுல்லா)
23. தோத்திர மாலை (திரிபுர சுந்தரி தோத்திர மாலை- தாமோதர முதலியார்)
24. பஞ்சாக்கர மாலை (திருக்கலைசை செங்கழுநீர் விசநாயகர் பஞ்சாக்கர மாலை - சிவஞான யோகிகள்)
25. பன்மணிமாலை (திருவாரூர்ப் பன்மணி மாலை - வைத்திய நாத தேசிகர்)
26. பிரார்த்தனை வெண்பா மாலை (சத்திய ஞானானந்த சரஸ்வதி)
27. புகழ்மாலை (நாமகள் புகழ் மாலை - க. சோமசுந்தரப் புலவர்)
28. புத்தி மாலை (பெண் புத்தி மாலை)
29. புராந்தக மாலை (திருவீரைப் புராந்தக மாலை - வீ. சு. பழனிக் குமருப் பண்டாரம்)
30. பூரண மாலை (பட்டினத்துப் பிள்ளை)

31. போற்றி மாலை (திருச்செந்தூர் சண்முகக் கடவுள் மீது போற்றி மாலை - செகவீர பாண்டியர்)

32. மணிமாலை (மாறன் கிளவி மணிமாலை - திருக் குருகைப் பெருமாள் கவிராயர்)

33. மதிமாலை (பெண்மதிமாலை - வேதநாயகம் பிள்ளை)

34. மந்திரமாலை (சுந்தானந்த பாரதி)

35. மருந்து வெண்பா மாலை (திருவாரூர் முருகக் கடவுள் மீது மாசிலாமணி மாலை - செகவீர பாண்டியர்)

36. மாணிக்க ·மாலை (வடிவுடை மாணிக்க மாலை - வள்ளலார்)

37. முதுமொழி மாலை (உமறுப்புலவர்)

38. மெய்கண்ட மாலை (திருக் கலைசை செங்கழுநீர் விநாயகர் மெய்கண்ட மாலை - சிவஞான சுவாமிகள்

39. மெய்ஞ்ஞான மாலை (பழனி வடிவேல் மெய்ஞ்ஞான மாலை)

40. ரத்தின மாலை (உபதேச ரத்தின மாலை - மணவாள மாமுனி)

41. வண்ணப் பாமாலை (திருவானைக்கா வண்ணப் பாமாலை - தண்டபாணி சுவாமிகள்)

42. விண்ணப்ப மாலை (தேவகோட்டை வெள்ளைய னூருணிக் கரையில் எழுந்தருளியிருக்கும் கலங்காத கண்ட விநாயகர் விண்ணப்ப மாலை - வெ. ஆ. தீ.மா. சிதம்பரச் செட்டியார்)

43. வெண்பாமாலை (புறப்பொருள் வெண்பா மாலை - ஐயனாரிதனார்)

44. வேண்டுவரம் பெறுமாலை (திருமந்திர நகரமென்னுந் தூத்துக்குடி பாகம்பிரியாள் பேரில் வேண்டு வரம் பெறுமாலை - தூ.ந. கந்த சுவாமிப் பிள்ளை)

மாலை, நூல் பதிப்புகள் (இலக்கிய வகையும் வடிவமும், சண்முகம் பிள்ளை, 592, 43)

வாமமாமலை மாலை ந. கனகராசனால் எழுதப்பட்டுள்ளது. ஆனால் இந்நூல் எந்த மாலை நூலிலும் பதிவாக்கப்படவில்லை.

தமிழ் இலக்கிய சிற்றிலக்கிய மரபில் சமயம் சாரா, சமயம் சார்ந்த இலக்கியம் என இரு கூறப்படுத்தலாம். சமயத்தில் மூழ்கிக் கிடக்கும் தமிழ் இலக்கிய மரபையே வானமாமலை மாலையும் சாரும். தெய்வத்தை தலைமையாகக் கொண்டு பாடப்பட்டதாய் வானமாமலை மாலையும் அமைந்துள்ளது. திருமாலை தலைவனாக கொண்டு பாடப்பட்டது வானமாமலை மாலையாகும்.

ஸ்ரீ

வானமாமலை மாலை

5. காப்பு

திருவான மாமலைவாழ் தேவேசன் பாதத்
துருவான மாலையினை யோதத் - திருவாய்
மொழியருளு மாறமுனி பாதம் போற்றி
இழிவகல வாழ்வோம்.

வேண்டுகோள்

தோதநத்திரி நாதனெனும் தூய்மைப் பெறான்
தொன்மைமலி யாலமத்தே சுடரா நின்முன்
வேதாந்திரி சிகரத்தே.

தென்தமிழ நாட்டகத்தே தெய்வக் காட்சி
சிறக்கவமை கோயில்பல திகழ்வ துண்டு
தொன்றமையு மாலயத்தே தொழுவார் வாழ்த்தத்
தோதாத்தி ரிநாதனெனச் சுடரும் மூர்த்தி
அன்றமையும் நெறியாயே சூடும் எண்ணெய்
அநுகுலமாம் மருந்தாக அளிக்கும் நோக்கால்
இன்றளவும் வீற்றிருக்கும் ஏற்றம் சான்ற
இருக்கையினைப் பாடுவதற் கெண்ணி னேனே.

வேதாத்திரி சிகரத்தே விளங்கும் தேவன்
　　மெய்தெளிந்த தமிழ் மறைக்கு விருப்ப மிக்கான்
தோதாத்திரி நாதனெனும் தூய நாமம்
　　துலக்கமுற விளக்கமுறும் துணையில் கோயில்
சாதாத்திரி கடக்கமுயல் சந்து வெல்லாம்
　　சரணமுற வருள்வதுவே தருமம் ஆகப்
போதார்த்திரி முடிமீது பொருந்தும் சோதி
　　போல்விளங்கு காட்சியினைப் புகழ்ப் புக்கே.

வளமிகு புண்ணியவனம் வயங்கும் பாங்கர்
　　வானமாம லையெனவே வருவார் போற்ற
உளமிகுந்த துரைக்கவரும் உரவோர்க் கெல்லாம்
　　ஒப்பதுவே ரருள்விளக்கும் ஒருவன் அன்றே
அளவிறந்த ஆற்றலினால் அபிடே கத்தே
　　அனையும் எண்ணெய் நிறைநிலையின்
　　　　அமணர்க் காட்சி
குளநிறைந்த நெய்போன்றே குலவா நிற்கும்
　　குணமலியும் தலத்தாற்கே கொடுப்பாம் பாலே.

6. பிரபந்தம்

பிறவிநோ யொழிக்கும் பெருமருத் துவன்
பிறவியி னிடைவரு பிணிகள்
உறவுற லொழித்தே யுதவுக வெனவே
உயிரினம் வேண்டுமா றுணர்ந்த
அறவுமே அவையும் களைவுறத் தகுந்த
அவுடதம் பெறுகென அருள்வான்
புறமகம் பணிவார்க் கருள்வது துணிந்தே
புகுந்தநல் வானமா மலையே.

பூதவத் திரிகள் பலப்பல விருந்தும்
புருடவுத் தமன் அருள் துணையா
சாதசுத் திரியும் கடந்துசம் சார
சாகரம் கடப்பது முளதேன்
மேதவத் திரிமேல் உலவுவான் குளிக்கும்
ஒருபொருள் மருந்தெனத் தருவான்
தோதஅத் திரியான் எண்ணெய்வாழ் கிணற்றுமுன்
சுடருவான் வானமா மலையே.

உடற்புறம் வருத்தும் குட்டமே முதல
ஒழிந்துய மருந்தருள் பெருமான்
இடர்ப்படு மினத்துக் கருள்வதே
இருநிலத் தெழுந்தரு ளியவன்

கடற்படு மணையை மறந்தனன் தமிழே
கவினுறு தென்னகம் புகுந்தே
மடற்படு மலரால் விளங்கு மேனியினாள்
வாழ்வது வானமா மலையே.

திருசிவ பேரூர்ச் சிவபிரான் நெய்யே
திருவளர் மேனியை மறைக்க
உருவரு விளங்கா திருத்தல்போ லிவனே
உவப்புறத் தயிலமே குளித்தே
வருமது புகுந்து நிறைந்திடு கிணறு
மருந்தே முழுமுற்றென வமைத்தான்
தருவது தயிலம் தீர்வன பலநோய்
சத்தியம் வானமா மலையே.

மானமா மலைமேல் வாழ்ந்துசீர் சிறந்த
மனித்தரே வரினுமா நில்த்தே
ஈனமா நிலையில் இருந்தவர் வரினும்
எவர்க்குமே அருந்திரு மருந்தான்
தானமா மலையாய்த் தருமமா கடலாய்த்
தரணிவாழ் தோதலத் திரியான்
வானமா முலையேறி ளைபவர் தமக்கும்
மனப்பிணி மெய்ப்பிணி வாரலே.

தவத்திலே சிறந்து வடமொழி மறையும்
தமிழ்தரு மறையுநன் கறிந்து
பலத்திலே புகுந்தார் தெளியலே விளம்பிப்
பரமனைத் தோதலத் திரியென்று
உலத்தலாய் மனமெய் யுருகவே தொழவார்
உத்தமத் துறவிவாழ் நகரம்
புலத்தியே திருவை குந்தமாம் பெருமை
பொருந்திய வானமா மலையே.

மூர்த்தியே தோத அத்திரிப் பெருமான்
முழுமுதற் கடவுளா மவனை
ஆர்த்தியே யுரையா தகமுறப் பணியும்
அருந்தவம் பொருந்தி ஓர் ஒருவர்
சீர்த்தியே யிருந்த திருமடத் தலைவர்
கேசவன் பணியன்றி அறியார்
பார்த்தியே மருந்தென் றெண்ணெயிந் தருளும்
மதிதிரு வானமா மலையே.

திலத்தினைக் கசக்கிச் செக்கிலே புரட்டிது
தெளிவுற யிருந்த மருந்தமைத் துதவும்
வள்ளலை நினைப்பவர் மனத்தின்
நலத்திரு லுயர்வர் செயலிரு லுயர்வர்
நாரண மாதவ நயம்பாட
திலத்து நெய்பெனலே தலைவனில்
சேலொடு வானமா மலையே.

மருந்தறிந் திலாரும் மந்திர வகையே
மனமுறப் பயில்கிலா தவரும்
வருந்திய உடல்நோய் உரைத்தனர் பணிந்து
மாதவ மருந்தே மகிதருந்த
அருந்துவ துரிதோ பூவுல துரிதோ
அறிசியே மெனவடைந் துறினும்
திருந்துமெய்ம் மருந்தை யருள்பிராமணர்ந்த
திருப்பதி வானமா மலையே.

முதுமையின் தளர்ச்சி முகத்திலே விளங்க
முழுமையும் நடுங்குற வருவான்
பதுமையும் நிலத்தின் மகளுமே பணிப்பூண்
பரமனைத் தோதலத் திரியை
மதுமய பணிய மைதமிழ் மறையால்
வாழ்த்தியே வணங்கியே பரவப்
புதுமையே யறியா மருந்துதந் தருள்வான்
பொருந்துவன் வானமா மலையே.

ஆண்டுபற் பலவாம் ஆழமே அறியாது
அரும்பெரு. மருந்தினை யுடைய
நீண்டுரு வமைந்த விருபெருல் சினந்துற
நிறைந்துள மருந்தினை யெருத்தே
வேண்டுறல் முதுவார் புதுமை பெண்ணேயிறை
வேண்டன விடுவது வழக்கே
ஈண்டுற முறையாற் குறையிலா மருந்தே
இப்பது வானமா மலையே.

திருத்தமு தோத லத்திரிப் பெருமான்
திருப்பதி தரிசனம் எளிதோ
அடுத்தநல் லமுதை யமரமக் கருளும்
அலன்நிலத் துறைபவர் பொருட்டே
வருத்தமே யொழிக்கும் மருந்தினை யுதவும்
வள்ளலாய் விளங்குகின் றனறே.
கருத்துற லிவனை நினைபவர்க் கருள்தல்
காட்டுமே வானமா மலையே.

குட்டமே பிணிக்க உடலகம் விகாரம்
குறுகிய காய்கரம் பொருந்த
நட்டமே நமது வாழ்வென நலிந்த
நரசினம் நாற்பது திவசம்
இட்டமே யிகலே இறைவனை நினைந்தே
இம்மருந் தணிந்துநீர் நிலையில்
துட்டநோய் ஒழியமூழ்குவ துளதே
தூய்மைய வானமா மலையே.

நாமமோ திணர்க்கும் மனத்துளே நினைந்து
நைந்துரு கியவினத் தினர்க்கும்
காமமே குரோதம் விளைத்தவப் பிணியும்
கழற்றியே யருள்புவி பரமன்
ஏமமே பெறுக எவ்வகைப் பிணியும்
யான்தரு மருந்தினுள் தீர்க
சாமமே யிசைக்க தமிழ்மறை புகல்க
தளமெனும் வானமா மலையே.

பலம்புகுந் துலகத் திடைதிரி நிலையில்
பரம்பொருள் நினைப்பையே யொழித்து
நலம்புகுந் துளபல் பொருளையும் நயந்தே
நாடோறும் தேடிய மனிதர்
அலம்புகுந் ததுவே வாழ்விலென் றுணர்ந்தே
அருள்மலி தோதலத் திரிக்கன்
தலம்புரி யுளமே பெறுவ ரெஞ்சிறப்பே
தருவது வானமா மலையே.

தாய்தரு மமுதம் குழவிக்கு மருந்தும்
தகுந்தநல் லுணவுமா வதனை
வேய்தரு குடிசை வாழ்வுறு குலத்து
மெல்லியல் நன்கறி குவனே
நோய்புகு முடலம் நலம்பெறும் விருப்பம்
நுழைவிலா நெஞ்சமும் உளதோ
காப்பிணி பகலத் தயிலமே யருளும்
கடவுளாய் வானமா மலையே

தலப்பெயர் தனக்கே தரும்பெய ரெனவே
தாங்குதோ தரத்திரித் தலைவன்
தலப்பெயர் தனது தயிலத்தாற் சிறப்பத்
தமிழகத் திருந்தருள் புரிவான்

கலப்பெயர் புகழ்ந்து கடலிலே திரிந்து
கணக்கிலாப் பொருள்திரட் டினரும்
நலப்பெயர் பொருந்த மனத்தொடு விரைவில்
நந்நலம் வானமா மலையே

சயிலமே யிருப்பான் கடலிலே இருப்பான்
தனக்கமை திருநகர் உவப்பான்
கயிலையி லிருப்பான் கடலுளே கிடப்பான்
கமலமா மலரின்மேல் உறைவான்
வெயிலையே தருநல் விழிகளை யுடைய
வேதவேத்திய னவன் அருளுட்
தயிலமே ம்ருந்தாய் தகுதியாற் பெறுமா
தகுந்தலம் வானமா மலையே

ஒருமுறை நிலத்தில் வீழ்ந்தெழுந் தவர்க்கே
ஒப்புயர் விலாநலம் முன்வான்
இருமுறை பணிந்தால் சினபலதற் குரிய
தெப்பொருள் எனநினை பரமன்
தருமுறை தெளிந்து தரணியிற் புகுந்து
தவத்திரு புடையவர் பணியை
அருமறை தெளிந்தே அடைபவர் இருக்கும்
ஆகரம் வானமா மலையே

தீரமே யணுகாத் தேவர்கள் பணியும்
சீரடி சாக ரத்திலே வளர்வான்
நாரமே தனது நிலைக்கள் மாக்கி
நாரமே அயனமாய் இருப்பான்
பாரமே பெரிதென் றினைந்த பக்தரையே
பரிவொடு பார்த்தருள் புரிவான்
வாரமே சிறந்த மனமுள பெருமான்
வானமா மலையுறை பரமனே.

ஈங்குளன் அறிவில் இருக்கிசைத் தணுகி
இசையொடு தமிழ்மழை புகல்மின்
யாங்குள பொருளும் அருளுல நுமக்கே
என்றருள் திருமுக முடையான்
வீங்குநீர் தினையில் எண்ணெயிட் டிழிந்து
விரும்பிய நீராடிய பிறகு
நீங்குமே பிணிகள் என்றிசைத் தருள்வான்
நிலையமா வானமா மலையே

உறங்குவ தறிவீர் விழிப்பது முணர்வீர்
உடம்பெடுத் துலகிடை வரலும்
அறங்களை இயற்றி யாவன விருந்தே
அசுமலன் மெய்ந்தியம் புகலறியா

திறங்கியே மீண்டும் பிறப்பினை யுறலே
இறப்பதும் இயல்பென அறிந்தீர்
கறங்குபோற் சுழலா தவனருள் தெளிமின்
கருதுமின் வானமா மலையே.

யாங்குள துடலின் பிணிகளை யொழிக்கும்
இறைதலம் எனவினவு திரேல்
நால்குனேரி யெனும் பெயர்பெறு நகராய்
நலம்பொலி தென்றமிழ கத்தே
ஓங்குவ ததுவே உயர்தவத் துறவி
உள்ல்கவர் சிறப்பின ததுவே
பாங்குள தலங்கள் பணியவே நிமிரும்
பதந்தது வானமா மலையே

குருகையே பணிவார் குறுங்குடி பணிவார்
குலாசல வணக்கமே பொருந்தும்
திருவருள் விளக்கம் பெருகுதோ தாத்திரி
சித்தமே யுருசினம் பணிவார்
உருகுறு நெய்யே யாகிய தயிலம்
உவப்புடன் பெறுவரே குவரே
தருவது பரமன் கருணையென் றிசைத்தே
சாகுவர் வானமா மலையே

திருமகள் தழுவும் திருவுர முடைய
தேவதோ தாத்திரித் தலைவ
அருமைப் பொருளு முளகொலோ நினையே
அகமுற நினைபவர் தமக்கே
வருமுறை யறிவேம் பணிநெறி தெளிவேம்
வானமா மலைபெயரில் முத்திக்
கருமுகில் உவமை ஆகலே தவம்பூண்
கருணையாய் வானமா மலையே

திணிந்தபே ரிருளிற் றிரிந்தன மணியேம்
திருமறு மார்பக முடையராய்
அணிந்த பூந்துவிலத் தையனே சரணம்
அடைபவர்க் கபயமே அருள்வாய்
துணிந்த போவுணன் இரணிய கசிபு
தூணகம் காணவே யெழுந்தாய்
பணிந்தநா யடியேம் பதம்பெற வருள்க
பரித்திர வானமா மலையே

அருகுணறி தெளிந்த திருமணவாள
அறிவரா மாமுனி பணியப்
பொருகுணறி யவர்க்கு விளக்கினை நினது
புரத்திலே பணிசெயப் புரிந்தாய்

மருகுணறி விழுந்து தளர்ந்துள மணத்தேம்
வருவதை யறிந்தருள் புரிவாய்
தெருனெறி யடியேம் சேரலே புரிவாய்
தேவனே வானமா மலையே.

தீரமேல் நடந்தார் திருவருள் பெறலே
செயும் திருக்குளத்திலே நிறைந்த
நீரமே குளித்தார் பெறும்பயன் உரைக்கும்
நிறைமொழி அறிசியே யிறையே
ஈரமே யுருவாய் எழுந்த ருளினையே
இரக்கமே எளிதெமக் கெனவே
வாரமே யிகலே திருப்பணி நினைப்பேம்
வள்ளலே வானமா மலையே

காதமே மணக்க நறுமணம் கமழும்
காக்கள் சூழ்திரு நகர்ப் பரம
நாதமே சிறப்ப இருவகை மறையும்
நலிந்துலார்க் கருள்புரி தலைவ
சீதமே மிகுந்த திருக்குளப் புளையி
தீவினை தீரலே முழுகிய
பாதமே பணிய வருபவர்க் கருளும்
பதத்தனே வானமா மலையே.

சாத்திரம் அறியேம் வேதமே நுழையோம்
தமிழிலும் நன்குற விழையேம்
பாத்திரம் அறிந்தே பவித்திர மருந்து
பலித்துற வருள் பரம்பரனே
காத்திர மிணையாக் கருணையே புரிந்து
கருத்துற நிறைந்தனை வலைமியா
தோத்திர முறைப்பேம் தொழுது கனைவேம்
தொல்பெரும் வானமா மலையே.

தொன்மையே கமழும் கருவறை யகத்தே
தோற்றமார் பருவதத் தமர்வாய்
பன்மையே யிலாத வொருமையே தெளிவாம்
பரம்பொரு ளென்றனக் கிணையே
நன்மையே றிளைப்பாய் தீமையே களைவாய்
நறுந்தமிழ் ஆரிய மறைகள்
வன்மையே புகல நினைச்சிறு வியலா
மயங்குமே வானமா மலையே

உள்ளமே யுருகித் தோதல திரியென்
றுரைப்பவர்க் குளநிறை திருவே
கள்ளமே யிலாத மனத்தினர் பணியக்
கனிவொடு மருள் பரம்பொருளே

பள்ளமே நிரம்பப் பழனமே செழிப்பம்
பயிர்வளர் பழம்பதிக் கரசே
வெள்ளமே கருணை விழியினால் விழிப்பாய்
வேதிய வானமா மலையே

மங்கை மன்னவரும் மழிசையர் பிரானும்
மாறனு ராகிய தவரும்
அங்கையி னெல்லிக் கனியென அறிந்த
அமுதத் தவமயத் தமல
சங்கையோர் கரத்தும் சுழியோர் கரத்தும்
தாங்கிய மனைமுடி முதுல்வ
செங்கை யாலளந்த திருவருட் சிறப்பைத்
தெளிகிலேம் வானமா மலையே

ஔவிய மழித்த நெஞ்சினோர் தொடரும்
அம்புய பதமிரண் டுடையாய்
கௌவிய முதலை காலினை யீர்க்கக்
கதறிய களிற்றினைப் புரந்தாய்
நௌவியல் அமைந்த திருவடி யிரண்டால்
நம்பினார் பிறவி வெங்கடலை
வௌவுதல் மறந்து கடந்தன ரடைய
வகுத்தனை வானமா மலையே

வானமா மலையாய் வெளிப்பட வருதி
மனத்துளே புகுவதை அறியேம்
ஞானமா மலையை யேறவே முயல்வார்
நணுகிய நளினநேர் பதத்தாய்
மோனமா மலையாய் முழுத்தவ முனியாய்
முனைவனே நினைத்தெளி மாறர்
தானமா மலைதிரு வாய்மொழி விருத்தம்
தாங்கினாய் திருப்புயத் தினிலே

சந்திர வமிசம் வந்த பேரரசர்
தம்முளே தருமனே சிறந்தான்
இந்திர னெனவே அவனுயிர் பெறலே
எம்பிரான் கண்ணனாய் அடைந்தாய்
இந்திர குமாரன் இரதமூர் பணியும்
ஏற்றனை கீரையு மிடைத்தாய்
மந்திர மறையின் பொருளெலாம் அதற்குள்
மறைத்தனை வானமா மலையே

சீதையின் கொமுறன் எனுந்திரு வேடம்
சீதாநீ தரித்திருநாள்
ஓதையின் மிகுந்த தென்கடல் கடந்தே
ஒழுக்கத்தின் பகைவனை யழித்தாய்

காதையின் மிகுந்த நின்திருக் கதையுள்
காட்டினை யொழுக்கத்தின் சிறப்பை
வாதையின் மிகுந்த பிறவி நோய்தனக்கே
மருந்தருள் வானமா மலையே

யானமே மதியாய் நடந்தனை வனத்தே
இராமனா யிநல்கு நானிணிலே
மானமே சிறந்த விசயனுக் குரிய
மந்திர மரைத்தன முகுந்த
கானமே பொழிந்து பசுக்களை வனைத்த
கண்ணனே அண்ணலே கருணைத்
தானமே யெனலா தரும சக்கரனே
தயைபுரி வானமா மலையே

பாற்கடல் கடந்த இருதிற த்தவரும்
பருகிய அமர்பொழு தகத்தே
ஏற்புற இடுவான் மோகினி யுருவம்
எடுத்தனை புருடவுத் தமனே
பாற்படு முலக தருமத்தை நிறுவம்
பலபல பிறவியும் புகுந்தாய்
நாற்பெரும் பொருளும் நம்பியோர்க் கருளும்
நாயக வானமா மலையே

அண்ணலே யெனைநீ கவற்குங்
அதருமம் தருமத்தை வெலுமோ
கண்ணனே யெமது குலத்தது மானம்
காப்பதுன் பொறுப்பெனக் கதறும்
பெண்ணணல் குளத்தே தோன்றினை விளங்கிப்
பெருந்திரு வினையாட் உயர்ந்தனையே
விண்ணவர் நினது பெருமையை யறியார்
விண்டுலே வானமா மலையே

கோகுலத் தினிலே இளையவர் முதியோர்
குமரிய ராகிய மகளிர்
ஆருலத் துடனே ஆடவர் கலங்க
சுகம்பறி கொடுத்தனர் நடந்தே
கோகுலத் திடையே குழலிசைத் திருந்த
குழவிமுன் திருத்தமே பயின்றார்
மாகுலத் தவரே முனிவரே யறியா
மறைதரும் வானமா மலையே.

இளஞ்சிறு முதலைச் சிறுவனா யிருந்த
எந்தையே நின்னொடு விருந்தை
வளம்பெறு நிலத்தை கற்றினத் துடனே
மற்றுள சிருரெலா மறைய
உளஞ்சிறு கிலையே எடுத்தனை பலவாம்
உருவமும் என்னை நின்னருளே
குளஞ்சேரி புனையாற் பிணியொ ழித்தருளும்
குணநிதி வானமா மலையே

அயர்த்தனம் அணியேம் நின்னருட் சிறப்பை
ஆலயம் தொழுவது தவிர்ந்தேம்
பெயர்த்தனம் எமக்குக் கலியுளத் தினிபே
பெருந்திரு மருந்தென அமைத்தாய்
உயர்த்தனம் இனையே அப்பெருந் தனத்தை
உண்மையில் அறிவி யுந்தனமே
வியர்த்தனம் தளர்ந்தோம் உலகமா யையினால்
வீடருள் வானமா மலையே

இயற்றமிழ் மதிப்பாய் இசைத்தமிழ் சுவைப்பாய்
எளிய நாடகத் தமிழ் புகுவாய்
அயற்றமிழ் எனலாம் கொடுந்தமிழ் மதியாய்
ஆயினும் அவருக்கும் அருள்வாய்
செயற்றமிழ் புதுமை விளைப்பதை யறிந்தும்
திருக்குரு கூர்முனி மொழியே
உயற்றமிழ் எனலே உலகுணறவே
உணர்த்தினை வானமா மலையே

மறைகளைப் பயின்று சாத்திர மனைந்த
மதுரமா கவியனும் மறையோர்
இறைவனே றினையே எய்துமா கருதி
இமயமே நடந்தன ரவனே
நிறைவுறு மோனியை வானகம் நோக்கி
நின்றிசை திருமிமீண் டனரே
குறைவது குருடர் முனிபணி புரியக்
குறித்தனை வானமா மலையே

முனிய நான்முகனே முக்கணா முதல்வா
முழுமுதற் கடவுளே முகுந்தா
கனியும் வாயுடையாய் தாமரை விழியாய்
கசிய மாணிக்க மேகன்வா
தனியனா ருயிரே தலைமிசை யமர்ந்தாய்
சரண்புகுந்தே னெறும் பெரியோர்
இனியவாய் மொழியை உவர்தனை யலையோ
எம்பிரான் வானமா மலையே

பரமனு மிலையே பரமவீற் றிருக்கும்
மரமநற் பதமுமொன் றிலையே
கரமது மிலையே கால்களு மிலையே
கடவுளென் றொருபொருளி லையே
உரமது துணிந்தே யுரைக்கி றொருமனுமல்
வுலவினார் புதுமையிற் புகாதே
சிரமது நினதுதிரு வடிக்கமைப் போம்
தெய்வமே-வானமா மலையே

அவதரித் திடும்அப் பொருளினை அணுக
ஆரியர் முயன்றனர் பலரே
அவதரித் திடுவான் இப்பொழு துளதோ
அயோத்தியோ துவரையே அடைந்தே

அவதரித் ததுவே புராணமாம் அதனை
அவனெதிர் வந்தினி விளக்கின்
அவதரித் தனைநம் புவோம்என் பார்க்கு
அறிவருள் வான மாமலையே.

உள்ளதோர் பொருளே இரண்டு மூன்றிலையே
உலகெலா முயிரெலாம் உறைந்து
கள்ளமே யிலாது கணக்கிலாப் பிறப்பைக்
காப்பது வதைப்பது மதுவே
வள்ளலே இறைவா மாதவா எனவே
மனமுற வழைப்பவர்க் குளத்தே
தெள்ளவே தெளிபவர்க் கருள் புரியும்
தெய்வமாய் வானமா மலையே

அரசேன அழைப்பின் அரசனாய் வருவான்
ஆண்டிபேர யெனநினைத் தழைப்பின்
கரசர னாதி யொடுங்கிய முதுமை
கலப்புறு மாண்டியாம் வருவான்
பரசலே யறிய பரம்பொரு ளெனலே
பகரலே பரம்பொருள் ஒளிரும்
சரசமே அவனை யறிந்தணு குவதே
சத்தியம் வானமா மலையே

சத்தியம் அவனே சாத்திரம் அவனே
சதர்மறை முழுமையு மவனே
நித்திய மவனே நிறைபவன் அவனே
நீலமே விளக்கிய ஒளியின்
கத்திய மவனே கருத்துரை அவனே
காரண காரியம் அவனே
பத்திய மவனே பாலும் அவனே
பணிகவோ வானமா மலையே

வாழ்த்து

வானமா மலையாம் திருநகர் வாழ்க
வாழிய அல்முறை மனிதர்
வானமா மலையாம் திருத்தலத் தினிலே
வயங்கு மெய்ப்பொருளருள் வாழ்க
வானமா மலையின் அறத்தினைப் புரக்கும்
மடாதிபர் மரபுமே வாழ்க
வானமா மலையின் மாலையும் வாழ்க
மகிதலம் வாழிய வளர்ந்தே.

7. பாடல் அகர வரிசை

அருகுணெறி தெளிந்த
அண்ணலே எனைநீ
அயர்த்தனம்
அரசேன அழைப்பின்
அவதரித்திரும்
ஆண்டுபற் பலவாம்
இசையொடு தமிழ் மழை
இயற்றமிழ் மதிப்பாய்
இளஞ்சிறு முதலை
ஈங்குளன் அறிவில்
உடற்புறம் வருத்தும்
உறங்குவ தறிவீர்
உள்ளமே உருகித்
உள்ளதோர் பொருளே
ஒருமுறை நிலத்தில்
ஔவிய மழித்த
காதமே மணக்க
குட்டமே பிணிக்க
குருகையே பணிவார்
கோகுலத் தினிலே

சத்தியம் அவனே
சந்திர வமிசம்
சயிலமே யிருப்பன்
சாத்திரம் அறியேம்
சீதையின் கொமுறன்
தலப்பெயர் தனக்கே
தவத்திலே சிறந்து
தாய்தரு மமுதம்
திருதேமு தோத
திருசிவ பேரூர்ச்
திலத்தினைக் கசக்கிச்
திருமகள் தமூவும்
திணிந்த பேரிருளிற்
தீரமே யணுகாத்
தீரமேல் நடந்தார்
தொன்மையே கமழும்
நாமமோ திணர்க்கும்
பலம்புகுந் துலகத்
பரமனு மிலையே
பாற்கடல் கடந்த
பூவத் திரிகள்
பிறவிநோய் ஒழிக்கும்

மறைகளைப் பயின்று
மருந்தறிந் திலாரும்
மானாமா மலைமேல்
முதுமையின் தளர்ச்சி
முனிய நான்முகனே
மூர்த்தியே தோத
வளமிகு புண்ணியவனம்
வானமா மலையாய்
வேதாத்திரி சிகரத்தே
யாங்குள துடலின்
யானமே மதியாய்

8. பின்னிணைப்பு

தாட் சுவடி விவரம்

02.06.70 அன்று ஸ்ரீராமநகர் என்ற இடத்திலிருந்து திரு. நா. கனகாராசன் அவர்களால் எழுதப்பட்டுள்ளது. வைகாசி மாதம், வியாழக்கிழமை காலை 8 மணி அளவில் இத்தாள் சுவடி எழுதப்பட்டுள்ளது. தாள் சுவடியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சுவடி அனைத்து ஏடுகளிலிருந்தும் இதுவரை யாரும் பதிப்பிக்கவில்லை என்பதை அறிந்து பதிப்பிக்க முற்பட்டேன். இத்தாள் சுவடி வானமாமலை மாலை என்ற தலைப்புடன் எழுதப்பட்டுள்ளது. காப்பு, வேண்டுகோள், வாழ்த்து என்ற அடிப்படையில் அமைந்துள்ளது. காப்பு பாடல் ஒரு வகையான யாப்பைப் பெற்றுள்ளது. பிரபந்தச் செய்யுள் என்ற பிரிவுகளில் உள்ள பாடல்கள் எழுசீர் ஆசிரிய விருத்தத்தில் அமைந்துள்ளது.

வானமாமலை மாலை தாள் சுவடி 13 பக்கங்களைக் கொண்டுள்ளது. காப்புப் பாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது. வேண்டுகோள் பாடல் 3 இடம்பெற்றுள்ளது. பிரபந்தம் என்ற பிரிவுகளில் 53

பாடல்கள் இடம்பெற்றுள்ளது. இத்தாள் சுவடி வைகாசி மாதம், புதன் கிழமை அமாவாசை திதியில் மாலை 6.30 மணிக்கு நிறைவேறியதாகக் கூறப்பட்டுள்ளது. இத்தாள் சுவடி கோட்டையூர், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்ததாகும்.

9. துணை நூற்பட்டியல்

1.	மு. சண்முகம் பிள்ளை 1998	மண்டல புருடர் - சூடாமணி நிகண்டு, தொகுதி-11, உலகத் தமிழ் ஆரய்ச்சி நிறுவனம்.
2.	கலைக்களஞ்சியம் 1961	தொகுதி - 8, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை.
3.	சு. இலம்போதரன் 2005	பழைய தமிழ் அகராதி பிங்கல நிகண்டு, பிங்கல முனிவர்.
4.	ச.வே. சுப்பிரமணியன் 1984	தமிழ் இலக்கிய வகையும் வடிவும்.
5.	எம்மார். அடைக்கலசாமி 1999	தமிழ் இலக்கிய வரலாறு.
6.	சிலம்பு நா. செல்வராசு 1995	இருபதாம் நூற்றாண்டுச் சிற்றிலக்கியங்கள்.
7.	இரா. கண்ணன் 2002	சிற்றிலக்கிய ஆராய்ச்சி, முதல் தொகுதி.

8. மு. வரதராசன் 1994	தமிழ் இலக்கிய வரலாறு.
9. ந. பிச்சமுத்து 1994	திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கைகளும்.
10. ஆறு. அழகப்பன் 1981	தமிழ்ப் பேழை.
11. அ. ஜெயம் 1997	தமிழ் இலக்கிய வரலாறு.
12. சு. சண்முகசுந்தரம் 1980	நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு.
13. மு. சண்முகம்பிள்ளை 1981	சிற்றிலக்கிய வளர்ச்சி.
14. ந. வீ. செயராமன் 1979	சிற்றிலக்கியச் செல்வம்.
15. சி. பாலசுப்பிரமணியன் 2001	தமிழ் இலக்கிய வரலாறு.